**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 649/2021**

Prosecution witness : 2

| | | | |
|---|---|---|---|
| Name: | மணிகண்டன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1 and A2 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of** 05.02.2026

**முதல் விசாரணை**:

நான் தற்போது ஒட்டஞ்சத்திரம் போக்குவரத்து சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 29.07.2020ம் ஆண்டு நான் தெற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது ஜான்சன் ஜெயக்குமார் என்ற சார்பு ஆய்வாளர் என்னை தொலைபேசிக்கு ரகசிய தகவலின் படி TN 57 8676 என்ற வாகனத்தை பயன்படுத்தி இருவர் கஞ்சா விற்பதாக தகவல் வந்தது. நிலையத்தில் உள்ள 1177-அந்தோணி மற்றும் நான், 237-பிரபு என்பவருடன் முத்தழகு பட்டி,ஒத்தைப்பனைமரம் அருகே மறைந்திருந்து கண்காணித்தோம். TN 57 8676 என்ற வாகனத்தை வரும்போது மறித்து தாங்கள் சந்தேகத்திற்கு இடமான போதைவஸ்துக்களை விற்பனை செய்வதாக தகவல் வந்ததன் பேரில் உங்களை சோதனை செய்வதற்காக நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசு அத்தாட்சி பெற்ற அவர்கள் முன்னிலையில் ஆஜர்படுத்த உரிமை கோர உரிமையுள்ளது என்று வாளருடன் தனி அறிக்கை சார்பு செய்து ஆய்வாளர் எங்களை விசாரிக்க நடந்ததை கூறினோம்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. சார்பு ஆய்வாளர் கோரியதன் பேரில் அந்தவாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் தங்கள் பெயர் குணசீலன், கார்த்திக் என்று கூறினார்கள். மேற்படி அவர்களிடம் நீதித்துறை நடுவர் முன்பு அழைத்து செல்ல வாங்கள் என்று கூறியபோது வேண்டாம். தாங்களே சோதனை செய்துகொள்ளலாம் என்று கூறிஒப்புதல் கடிதம் கொடுத்ததன் பேரில் அவர்கள் தன் கையில் வைத்திருந்த வெள்ளை நிற பாலிதீன் கவரில் 600கிராம் கஞ்சா வைத்திருந்தார்கள். அவர்களை மிரட்டியோ, எவ்வித ஆசை வார்த்தை கூறியோ, அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 600 கிராம் கஞ்சாவிலிருந்து மாதிரிக்காக இரண்டு 50 கிராம் கஞ்சாக்களை மாதிரிக்காக எடுத்து காக்கி கவரில் வெள்ளை நூல் சுற்றி பட்டன் சீல் வைத்தோம். மீதம் உள்ள 500கிராம் கஞ்சாவை அதே போல் காக்கி கவரில் கவர் செய்யப்பட்டது. மேலும் வர்களுக்கு கஞ்சா எப்படி வந்தது என கேட்டபோது சோலைக்கால் தெருவை சேர்ந்த வேளாங்கன்னி என்பவரிடமிருந்து 1கிலோ ரூ.10,000/- க்கு வாங்கி வந்து சில்லரை விற்பனைக்காகவும், மீதத்தை வீட்டில் வைத்திருப்பதாகவும் அழைத்து சென்றால் வீட்டில் உள்ள கஞ்சா 13 கிலோவை எடுத்து தருவதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். மேற்படி நபரை பொதுமக்கள் யாரும் இல்லாத காரணத்தால் காவலர்கள் முன்பு கைது செய்தும், மேலும் அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்தும், அவர் இல்லம் அழைத்து சென்று அவர் இல்லத்திலிருந்த கஞ்சாவை கைப்பற்றி இரண்டு 100கிராம் வீதம் மாதிரிக்காக எடுத்து காக்கி கவரில் நூல் சுற்றி, பட்டன் சீல் வைத்து மீதியும் அதேபோல் காக்கி கவரில் வைத்தோம். அவர் வீட்டில் எடைபோடும் இயந்திரம், இரண்டு ஜிப்கவர் கைப்பற்றினோம். அந்த இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லாத காரணத்தால் எங்களுடைய

கையொப்பமும், இரண்டு நபர்களின் கையொப்பமும் பெறப்பட்டது. மேலும் அவர்களை காவல்நிலையம் அழைத்து வந்து தனி அறிக்கைமூலம் சார்பு ஆய்வாளருடன் தனி அறிக்கை சார்பு செய்து ஆய்வாளர் எங்களை விசாரிக்க நடந்ததை கூறினோம்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.